**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு T. சோழவேந்தன்,** B.A.,B.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

2023–ம் ஆண்டு நவம்பர் மாதம் 08 – ம் நாள் புதன்கிழமை

******

**இடைமனு எண்.1/2021–ல் அசல் வழக்கு எண். 91/2012**

அம்பிகா அம்மாள் .... மனுதாரர்/வாதி

...எதிர்..

1. சங்கர்
2. ஆனந்தன்(இறந்தார்) .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
3. பிரியா
4. மைனர் கார்த்திகா
5. மைனர் அகிலன் ... 4, 5 சேர்க்கப்பட வேண்டிய நபர்கள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 04.11.2023 அன்று இறுதியாகவிசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் R. வேணுகோபாலன் அவர்களும், முதல் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு A.ராம்குமார் அவர்களும், 2–ம் எதிர்மனுதாரர் 09.01.2020 அன்று இறந்துள்ளார். 3–ம் எதிர்மனுதாரர் 12.04.2022 அன்று இந்நீதிமன்றத்தில் அழைத்து ஆஜரின்மையால் தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளார். 4, 5 எதிர்மனுதார்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு சௌந்தராஜ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

இரண்டாம் பிரதிவாதியின் வாரிசுகளான 3 முதல் 5 எதிர்மனுதாரர்களை தரப்பினர்களாக இந்த அசல் வழக்கில் சேர்த்து வழக்கை மேல் நடத்த அனுமதி கோரி மனுதாரர்/வாதி இம்மனு உ.வி.மு.ச.கட்டளை-22, விதி-4-ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுவின் சுருக்கம்</u>**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. மனுதாரர் அசல் வழக்கில் விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு நிலுவையில் உள்ளபோது அசல் வழக்கின் 2-ம் பிரதிவாதி ஆனந்தன் 09.01.2020-ம் தேதியன்று இறந்துவிட்டார். இறந்த 2-ம் பிரதிவாதிக்கு பிரியா, மைனர் கார்த்திக், மைனர் அகிலன் ஆகியோர்கள் வாதிசுதாரர்கள் ஆவர்கள். மேற்படி நபர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து கொண்டு வழக்கை மேல் நடத்த மனுதாரருக்கு மிகவும் அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. இல்லையென்றால் மனுதாரர்/வாதிக்கு மிகுந்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படக்கூடும். எனவே 2–ம் பிரதிவாதியின் வாரிசுகளான 3 முதல் 5 வரையிலான தரப்பினர்களை இந்த அசல் வழக்கில் சேர்த்து வழக்கை மேல் நடத்த அனுமதி கோரி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

**2. <u>4, 5-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்.</u>**

மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படியும் நியாயப்படியும் சரியல்ல. வழக்குரையில் ஏற்பட்ட ஆவணமானது 04.01.2010 மற்றும் 11.08.2010-ல் ஏற்பட்டவையாக வாதி குறிப்பிட்டுள்ளார். ஆனால் இவ்வழக்கின் 2-ம் எதிர்வாதி இறந்த தேதியானது 11.07.2011 அவர் உயிரோடு இருக்கும்வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் அவரது இறப்பிற்கு பின் பரிகாரம் கோருவது ஏற்புடையதல்ல. இவ்வழக்கின் 2-ம் எதிர்வாதிக்கு எதிராக வாதியால் எவ்வித பரிகாரமும் கோரப்படாத நிலையில் அவர்களுடைய வாரிசு என்ற முறையில் 4, 5 எதிர்வாதிகளுக்கு எதிராக வாதி எவ்வித பரிகாரமும் கோரமுடியாது. எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

3. மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>தீர்வு:</u>**

5. மனுதாரர் தரப்பில், மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், மனுதாரர் அசல் வழக்கில் விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், வழக்கு நிலுவையில் உள்ளபோது அசல் வழக்கின் 2-ம் பிரதிவாதி ஆனந்தன் 09.01.2020-ம் தேதியன்று இறந்துவிட்டார் என்றும், இறந்த 2-ம் பிரதிவாதிக்கு பிரியா, மைனர் கார்த்திக், மைனர் அகிலன் ஆகியோர்கள் வாதிசுதாரர்கள்ஆவர்கள் என்றும், மேற்படி நபர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து கொண்டு வழக்கை மேல் நடத்த மனுதாரருக்கு மிகவும் அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது என்றும், இல்லையென்றால் மனுதாரர்/வாதிக்கு மிகுந்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படக்கூடும் என்றும், எனவே 2–ம் பிரதிவாதியின் வாரிசுகளான 3 முதல் 5 வரையிலான தரப்பினர்களை இந்த அசல் வழக்கில் சேர்த்து வழக்கை மேல் நடத்த அனுமதி கோரி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

6. எதிர்மனுதாரர் தரப்பில், வழக்குரையில் ஏற்பட்ட ஆவணமானது 04.01.2010 மற்றும் 11.08.2010-ல் ஏற்பட்டவையாக வாதி குறிப்பிட்டுள்ளார் என்றும், ஆனால் இவ்வழக்கின் 2-ம் எதிர்வாதி இறந்த தேதியானது 11.07.2011 அவர் உயிரோடு இருக்கும்வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் அவரது இறப்பிற்கு பின் பரிகாரம் கோருவது ஏற்புடையதல்ல என்றும், இவ்வழக்கின் 2-ம் எதிர்வாதிக்கு எதிராக வாதியால் எவ்வித பரிகாரமும் கோரப்படாத நிலையில் அவர்களுடைய வாரிசு என்ற முறையில் 4, 5 எதிர்வாதிகளுக்கு எதிராக வாதி எவ்வித பரிகாரமும் கோரமுடியாது என்றும், எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள

மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

7. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கின் கோப்புகளை பரிசீலனை செய்ததில் அசல் வழக்கை வாதி விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இம்மனுவின் பிராமான வாக்குமூலம் வாதியின் மகளான சாந்தி என்பவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இறந்த 2-ம் பிரதிவாதியின் வாரிசுகளை தான் இந்த அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க மிகவும் அவசியமாவும், நியாயமாகவும் இருக்கிறது என்று கூறியுள்ளார். எதிர்மனுதாரர்கள் தரப்பில் அதனை மறுத்துள்ள நிலையில் மனுதாரரின் கோரிக்கை அவசியமும், நியாயமாகவும் உள்ள இம்மனுவை அனுமதித்தால் எதிர்மனுதார்களுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்பட போவதில்லை. மேலும் மனுதாரர் இம்மனுவில் கோரியுள்ள இறந்த 2–ம் பிரதிவாதியின் வாரிசுகளான 3 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்தால் வழக்கின் வழக்கு மூலமோ, வழக்கின் தன்மையோ மாறிவிடப்போவதில்லை என்பதாலும், மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் பின்னிட்டு ஏற்படும் (Multiplicity proceedings) ஒரே பொருண்மையின் அடிப்படையில் ஏற்படும் வழக்கு நடிவடிக்கைகளை தவிர்க்கும் பொருட்டு தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்றும் மனுவின் தன்மை கருதி தரப்பினர்கள் அவரவர் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சணைக்கு தீர்வு காண்கிறது.

இறுதியில் இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு நவம்பர் மாதம் 08-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்/– T. சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |
| எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |

(ஓம்/– T. சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடைமனு எண்.1/2021–ல்
அசல் வழக்கு எண்.91/2012
நாள்.08.11.2023